செய்தி வெளியீடு எண்:508 நாள்: 20.8.2009

## செய்தி வெளியீடு

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், குப்பனாபுரம் கிராமத்தில் செயல்படும் அங்கன்வாடி மையத்தின் ஒரு பகுதி கட்டடம் 19.8.2009 புதன் கிழமையன்று மாலையில் இடிந்து விழுந்ததில் காயமடைந்த ஜெயகணேஷ் என்பவரின் மகன் சுபராஜ் (வயது 3) உடனடியாகத் தூத்துக்குடியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டு, சிகிச்சையளித்தும் பயனின்றி இன்று பிற்பகலில் உயிரிழந்தான். இந்தச் செய்தி தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்து, உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மகனை இழந்து தவிக்கும் பெற்றோரின் ஏழ்மையான குடும்பச் சூழ்நிலையைக் கருதி, அவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதியுதவி வழங்கிட இன்று (20.8.2009) ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.